ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2287/24 - 2022 ජූලි මස 07 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.07.07
*2287/24 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 07 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 5/2017*

**1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கப்பற்றொழில் முகவர்களுக்கு, கப்பற்சரக்கனுப்புநர்க்கு, கலன் செயற்படுத்தாப் பொதுக்காவுநர்க்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் சட்டம்**

1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கப்பற்றொழில் முகவர்களுக்கு, கப்பற்சரக்கனுப்புநர்க்கு, கலன் செயற்படுத்தல் பொதுக்காவுநர்க்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் சட்டத்தின் (3) ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 10 ஆம் பிரிவின்கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமானசேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**நிமல் சிறிபால டி சில்வா,**
துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும்
விமானசேவைகள் அமைச்சர்.

கொழும்பு,
*2022, யூன் 25.*

1A - G 37247 — 08 (2022/08)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**ஒழுங்குவிதிகள்**

*1993 ஆம் ஆண்டு ஏப்பிறல் 21 ஆந் திகதிய 763/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளின் மூலம் திருத்தப்பட்டவாறான 1991 ஆம் ஆண்டு ஒற்றோபர் 17 ஆந் திகதிய 684/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1991 ஆம் ஆண்டின் கப்பற்றொழில் முகவர்கள் (உரிமமளித்தல்) ஒழுங்குவிதிகள், அவற்றின் 5 ஆம் ஒழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் (ஆ) (ii) என்னும் உட்பந்தியில், ''கம்பெனியொன்றாகவிருத்தல் வேண்டும்.'' என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றன:-*

"கம்பெனியொன்றாகவிருத்தல் வேண்டும்:

ஆயின், பகிரங்க அல்லது தனியார் கம்பெனியெதுவும், பின்வருமிடத்து இவ்வுட்பந்தியின்கீழான உரிமமொன்றுக்குத் தகவுடையதாதலாகாது:-

(அ) பங்குகளானவை ஒரு வெளிநாட்டுப் பிரசையொருவரினால், அல்லது ஒரு வெளிநாட்டில் கூட்டிணைக்கப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்ட ஒரு பகிரங்க அல்லது தனியார் கம்பெனியினால் சொந்தமாக வைத்திருக்கப்படுமிடத்து; அத்துடன்

(ஆ) அத்தகைய வெளிநாடு, அந்நாட்டின் சட்டத்தின் மூலம், அந்நாட்டில் கூட்டிணைக்கப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்ட ஒரு பகிரங்க அல்லது தனியார் கம்பெனியின் பங்குகளைச் சொந்தமாக வைத்திருப்பதற்கு இலங்கைப் பிரசைகளைத் தடைசெய்யுமிடத்து:

ஆயின், எவ்வாறாயினும், அமைச்சர், தேசிய நலனையும் விதிவிலக்கான சூழ்நிலைகளையும் கவனத்துட்கொள்வதன்மேல், இத்தேவைப்பாட்டை விட்டுக்கொடுக்கலாம்.".

08 - 135

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.